செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 217 நாள் : 17/4/17

# வேளாண்மைத் துறை

## விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கமுறை

## விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத்திட்டம்

தமிழகத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்திட வேளாண்மைத் துறை தொடர்ந்து பல்வேறு செயலாக்கப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இரண்டாம் பசுமைப்புரட்சியின் இலக்கான **"இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம்"** என்ற குறிக்கோளினை அடையும் பொருட்டு **"விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறைத்திட்டத்தில்"** குழு சார்ந்த நிரந்தரப் பயணத் திட்டமானது தமிழ்நாடு முழுவதும் வேளாண்மைத் துறை விரிவாக்கப்பணி மேற்கொள்ளும் அனைத்து வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிரந்தரப் பயணத்திட்டத்திற்கான அனைத்து வட்டாரங்களிலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள மொத்த கிராம ஊராட்சிகளை (Village Panchayat) வட்டாரத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள உதவி வேளாண்மை அலுவலர்களின் (விரிவாக்கம்) எண்ணிக்கையினைக் கொண்டு பகுத்தளித்து, அதன் அடிப்படையில் உதவி வேளாண்மை அலுவலர்கள் வாரியாக கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய தொகுதியினை(Group) ஒதுக்கீடு செய்யபடுகிறது.

உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய தொகுதியினை 8 பகுதிகளாக பிரிக்கப்பட்டு, 8 கிராமங்களுக்கு மேல் ஒரு உதவி வேளாண்மை அலுவலருக்கு ஒதுக்கீடு செய்ய நேர்ந்தால் கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இரண்டு கிராமங்களை ஒன்றிணைத்து ஒரே நாளில் பார்வையிடும் வகையில் நிரந்தரப்பயணத் திட்டம் வகுத்தும், 8 கிராமங்களுக்கும் குறைவான கிராமங்கள் ஒரு உதவி வேளாண்மை அலுவலருக்கு ஒதுக்கீடு செய்ய நேர்ந்தால், இதில் உள்ள பெரிய கிராமத்தினை இரண்டாக பிரித்து எட்டு தொகுதியாக்கி பயணம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

அரைத் திங்களின் முதல் மற்றும் இரண்டாம் வாரத்தில் திங்கள் முதல் வியாழன் வரையுள்ள 8 நாட்களில் (4+4), 8 பகுதிகளுக்கும் நிரந்தரமாக பயணத்திட்டம் வகுக்கப்பட்டு அதே பயணத்திட்டத்தினை மாதத்தின் 3 மற்றும் 4ம் வாரங்களிலும் பின்பற்றுகிறார்கள். பிரிக்கப்பட்ட 8 பகுதிகளில் இருவாரத்திற்கு ஒருமுறை உதவி வேளாண்மை அலுவலர்கள் பயணம் மேற்கொள்கிறார்கள்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்லும் எட்டு தொகுதிகளிலும் உள்ள கிராம ஊராட்சி அலுவலகங்களில் தொடர்பு மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு பயணவிவரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி அலுவலகம் இல்லாத நிலையில் பிற பொது இடங்களில் தொடர்புமையம் அமைக்கப்பட்டுள்ளது. உதவி வேளாண்மை அலுவலர்கள் வருகையினை பதிவு செய்து வயல்வெளிகளுக்கு சென்று விவசாயிகளிடையே தொழில்நுட்ப பரவலாக்கம் உள்ளிட்ட விவாக்கப்பணியினை மேற்கொண்டு, மீள தொடர்பு மையத்திற்கு வருகை தந்து விவசாயிகளிடையே தொழில்நுட்ப கலந்துரையாடல் மேற்கொள்கிறார்கள். தொடர்பு மையத்தில் உதவி வேளாண்மை அலுவலர்களின் பயண விபரம் உள்ளடக்கிய சுவர் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

இப்பணியினை வேளாண் அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர், வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் தேவைக்கேற்ப கண்காணிப்பு பணி மேற்கொண்டு பயிர் விளைச்சலை பெருக்கும் வகையில் திட்ட செயலாக்கங்களுடன் கூடிய தொழில்நுட்ப வழிகாட்டுதல் வழங்குகிறார்கள்.

இவ்விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கமுறையில் அனைத்து விவசாயிகளும் தங்களது கிராமங்களில் தங்களுக்கு தேவையான வேளாண் துறை சார்ந்த அனைத்து விவரங்களையும் பெற்று பயனடையலாம் என வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஓம்.செ.சுப்புலெட்சுமி
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
வேலூர்

-ஆணைப்படி-

17-04-2017
வேளாண்மை அலுவலர்

07/4/17
செ.ம.தொ.அ
வேலூர்- 9.

Contact Person.
Thiru Murugan
Agrl. officer (Quality Control)
9129873873